சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஐ.ஏ.369/2011 இன் ஓ.எஸ்.110/2011

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.5 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் முகம்மது உறுசேன் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

முதல் விசாரணை

10.03.2020 - நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பில் 5வது சாட்சி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில்உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆகும். அஉறானா மருத்துவமனையில் வழங்கப்பட்ட 11 எண்ணிக்கையுள்ள மருந்து சீட்டுக்கள் ம.சா.ஆ.4 ஆகும். (இந்த ஆவணங்களை இவர் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது) மதுரை அஉறானா மருத்துமனையில் வழங்கப்பட்ட டெஸ்ட் ரிப்போர்ட் ம.சா.ஆ.5 ஆகும். (இந்த ஆவணங்களை இவர் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது)

குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

நான் பாத்திமா பீவியின் உடன் பிறந்த சகோதரன் கிடையாது என்று சொன்னால் சரிதான். ஒன்றுவிட்ட சகோதரன் ஆவேன். பாத்திமா பீவியின் உடன்பிறந்த சகோதரி ஆயிஷா என்றால் சரிதான். அவருடைய நாத்தனாரை திருமணம் செய்த வகையில் எனக்கு உறவு என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எனக்கு உறவு எதுவும் கிடையாது என்றால் சரிதான். பாத்திமா பீவியை முதலில் ரஜாக் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். ரஜாக் என்பவர்

எங்கது ஜமாத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். ரஜாக்கிற்கும் பாத்திமா பீவிக்கும் விவாகரத்து ஆகிவிட்ட விபரம் பற்றி எனக்கு தெரியும். எந்த தேதியில் என்ன முறையில் விவாகரத்து ஆனது என்ற விபரம் பற்றி பாத்திமா பீவியிடம் தான் கேட்கவேண்டும். பாத்திமா பீவிக்கும் அப்துல்லாவிற்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 23.03.2001ம் தேதி நடைபெற்றது. நான் எங்கள் ஜமாத்தில் எந்த பதவியிலும் இல்லை. நான் நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ள பாலசரண்யா மனநல மருத்துவமனை தனியார் தொண்டு நிறுவனம் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் அதற்கான கட்டணம் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தது சம்பந்தமாக பாத்திமா பீவி பணம் செலுத்திய விபரம் பற்றி தெரியுமா என்றால் பாத்திமா பீவி பணம் கட்டியது எனக்கு தெரியாது, அவர் தங்கை கணவர் பணம் கட்டினார். அவ்வாறு பாத்திமா பீவியின் தங்கை கணவர் பணம் கட்டியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததை நான் நேரில் சென்று ஒரு முறை பார்த்துள்ளேன். எந்த தேதியில் நான் சொன்னவாறு மருத்துவமனைக்கு சென்றேன் என்ற விபரத்தை என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் ஆமாம். பாத்திமா பீவிக்கும் அப்துல்லாவிற்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு 2005ம் ஆண்டு முதல் பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் இல்லை. 2005ம் ஆண்டு முதல் வழக்கு தாக்கல் செய்த காலம் வரை நானும் பாத்திமா பீவியும் அப்துல்லாவை பார்க்கவில்லை என்றால் நாங்கள் முயற்சி செய்தோம், பார்க்க விடவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னையும் பாத்திமா பீவியையும் பார்க்கவிடவில்லை என்றால் சரிதான். பாலசரண்யா மருத்துவமனையில் அப்துல்லாவை சேர்க்கும்போது 2005ல் கட்டணம் எவ்வளவு வழக்கு தாக்கல் செய்யும்போது கட்டணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் சம்பந்தமாக என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எனக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் பொதுவாக அட்மிசம் போடும்போது ஏற்பட்ட ஆவணங்கள் என்றும் அதில் மனநிலை சரியில்லை என்று கூறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்களை வழக்கிற்காக நானும் பாத்திமா பீவியும் அஉறானா மருத்துவமனையில் இருந்து மோசடியாக

வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணம் தைராய்டு சம்பந்தப்பட்ட அறிக்கை என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக அவசரகதியில் தயாரிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தில் கண்டவாறு அப்துல்லா எந்த நோயாளும் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களில் முறையான சிகிச்சை அளிக்கப்பட்டதா என்று துலங்கவில்லை என்றால் சரியல்ல. அப்துல்லா பி.காம் வரை படித்துள்ளார் என்றால் இல்லை பி.காம் படித்து பாதியிலேயே நின்றுவிட்டார். அப்துல்லா தற்போதும் நல்ல மனநிலையில் தான் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.